பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 13

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 20

பகுதி 1: சிறப்புகள் 27

1 க்யூ இல்லை! நெரிசல் இல்லை!
ஒவ்வொரு வாசலிலும் வரவேற்பு! 29

1. ஆஹா, என்னவொரு பாக்கியம்! 30
2. சொல்லுங்கள், நாம் என்ன செய்யலாம்? 31
3. நேரம் வீணாக விடாதீர்கள் 32
4. வாய்ப்பை நழுவ விடாதீர்கள் 33
5. பலனடையுங்கள் 33
6. முடிந்த வரை முயற்சி செய்யுங்கள் 34

2 அள்ள அள்ள நன்மைகள் - அதுதான் றமளான் 38

1. றமளான் – சொர்க்கத்தின் மாதம் 38
2. ஷைத்தான்கள் விலங்கிடப்பட்டும் பாவங்கள் ஏன்? 39
3. றமளான் – பாவமன்னிப்பின் மாதம் 41
4. றமளான் – வாய்மையாளர்கள், தியாகிகளின் மாதம் 44
5. றமளான் – இச்சைகளை வீழ்த்தும் யுத்த மாதம் 45
6. றமளான் – தர்மத்தின் மாதம் 45
7. றமளான் – குர்ஆன் மாதம் 46
8. றமளான் – உம்றா மாதம் 49
9. நன்மைகளை அள்ளிக்கொள்ள முந்துவோமாக! 50

3 நோன்பு ஒரு மகத்தான கடமை 52

1. கடமையைச் செய்வோம் 53

4 நோன்பு கடமையான வரலாறு 59

1. இரண்டு கட்டங்கள் 59
2. ஆரம்பத்தில் இருந்த சிரமம் 61

5 நோன்பின் கூலி இவ்வளவு என்றில்லை 63
1. நோன்பாளி - தனித்துவமான விசுவாசி 63
2. அளவில்லா கூலி 65
3. ஈருலகிலும் மகிழ்ச்சி 67
4. ரய்யான் விருந்தாளிகள் 67
5. அல்லாஹ் விரும்பும் மணம் 68
6. குற்றங்களுக்குப் பரிகாரம் 69
7. பிரார்த்தனைகள் ஏற்கப்படும் 70
8. நோன்பு சிபாரிசு செய்யும் 70
9. நரகத்திலிருந்து பாதுகாப்பு 70
10. நோன்புடன் இறந்தால் சொர்க்கம் 71
11. நிகரில்லா அமல் 72
6 நோன்பு ஒரு கேடயம் 73
1. நோன்பும் உள்ளமும் 77
2. நோன்பும் செல்வந்தரும் 78

பகுதி 2: சட்டங்கள் 79

1 பிறையை அணுகும் முறை 81
1. பிறை பார்ப்பது ஏன்? 81
2. றமளான் வந்துவிட்டதை எப்படித் தீர்மானிப்பது? 83
3. சர்ச்சைக்குப் பதில் என்ன? 87
4. அமீர் அல்லது காழீயின் அதிகாரத்திற்கு ஆதாரங்கள் 88
5. கருத்துவேறுபாடு நம்மைப் பிளக்காதிருக்க என்ன வழி? 95
2 விஞ்ஞானக் கணக்கீடு செய்பவர்களின் தவறான வாதங்களும் பதில்களும் 97
1. மூன்றுவித அறியாமைகள் 97
2. குர்ஆனுக்குச் சுயவிளக்கம் கொடுப்பதிலிருந்து வரும் வாதம் 98
3. அகராதிப் பொருளை முதன்மைப்படுத்தி எழுகிற வாதம் 100
4. உம்மீ சமுதாயம் நபிமொழிக்குத் தலைகீழ் விளக்கத்தை முன்வைக்கிற வாதம் 103

5. உம்மீ சமுதாயம் நபிமொழியின் நுட்பங்கள் 104
6. ஓர் இறை, ஒரு மறை, ஒரே பிறை வாதம் 114
7. தான் பெற்ற பிறை தகவலை மற்றவர்களையும் ஏற்கச் சொல்கிற வாதம் 119
8. காழீயின் அதிகாரத்தில் தலையிடுகிற வாதம் 122
9. விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றத்தை விரும்புகிற வாதம் 122

3 நோன்பு யாருக்குக் கடமை? 125
1. நோன்பு கடமையாகும் நிபந்தனைகள் 125

4 நோன்பு ஏற்கப்படும் நிபந்தனைகள் 129

5 களா சட்டங்கள் 132

6 நோயாளிக்கும் பயணிக்கும் உரிய சட்டங்கள் 135
1. நோயாளிக்குரிய சட்டங்கள் 135
2. பயணிக்குரிய சட்டங்கள் 136

7 களாவை எப்போது நிறைவேற்ற வேண்டும்? 140
1. களா நோன்பாளி இறந்துவிட்டால்... 141
• முதல் வகை: விரும்பினால் வாரிசுகள் நோற்கலாம் 141
• இரண்டாம் வகை: விரும்பினால் உணவளிக்கலாம் 142

8 நோன்பை முறிக்கும் காரணங்கள் 144
1. உண்ணல், பருகுதல் 144
2. உண்ணும் பருகும் அந்தஸ்தில் வரக்கூடியது 145
3. உடற்சேர்க்கை 145
4. சுயவிருப்பத்துடன் விந்து வெளியாதல் 145
5. வேண்டுமென்றே வாந்தி எடுத்தல் 145
6. மாதவிடாய் அல்லது பிரசவத்தீட்டு 146
• கடமையான நோன்பை முறிப்பதின் சட்டம் 146
• காரணமின்றி முறித்தவருக்கான சட்டம் 147
• நஃபில் நோன்பை முறிப்பதின் சட்டம் 147

9 நோன்பு முறிவு நிபந்தனைகள் 148
1. நோன்பாளி அறிந்தவராக இருப்பது 148

- ஸஹர் நேரம் முடிந்தும் அறியாமையில் உண்பவரின் சட்டம் 149

2. நோன்பாளி நினைவுள்ளவராக இருப்பது 150
3. நோன்பாளி சுயவிருப்பம் உள்ளவராக இருப்பது 150

- ருசி பார்க்கலாம் 152
- நறுமணம் பூசலாம், நுகரலாம் 153
- பல் துலக்கலாம் 153
- குளிக்கலாம், தலைக்கு எண்ணெய் தடவலாம் 155
- சுர்மா இடலாம் 156
- இரத்தம் வெளியாகுவதால் முறியாது 157
- நோன்பாளி ஹிஜாமா செய்வது குறித்த சட்டம் 157
- நோன்பின்போது வெறுக்கத்தக்க (மக்ரூஹ்) காரியங்கள் 160

10 ஃபித்யா மற்றும் கஃப்பாரா சட்டங்கள் **163**

1. ஃபித்யா சட்டம் 163

- ஃபித்யா கொடுக்க வேண்டியவர்கள் 163
- ஃபித்யாவின் அளவு 165

2. கஃப்பாரா சட்டம் 166

- காரணமின்றி நோன்பைத் துறந்தவரின் கஃப்பாரா 166
- நோன்பு நோற்றபடி உடற்சேர்க்கை செய்தவரின் கஃப்பாரா 167

பகுதி 3: ஒழுக்கங்கள் 171

1 நோன்பாளிக்குரிய கட்டாய ஒழுங்குகள் **173**

1. தொழுகையை நிலைநிறுத்துதல் 173
2. தடுக்கப்பட்ட சொல், செயல்களைத் தவிர்த்தல் 177

- பொய்யைத் தவிர்த்தல் 177
- புறம் பேசுவதைத் தவிர்த்தல் 178
- கோள் சொல்வதைத் தவிர்த்தல் 178
- கொடுக்கல் வாங்கலில் மோசடியைத் தவிர்த்தல் 179
- இசைப்பாடல்களைத் தவிர்த்தல் 180

2 நோன்பின் ஸுன்னத்துகள் 182

1. ஸஹர் 182

- ஸஹர் செய்வது பரக்கத் 182
- ஸஹரில் சிறந்த உணவு பேரீத்தம் பழம் 183
- ஸஹர் செய்வது இபாதத் 183
- ஸஹரைப் பிற்படுத்துவது ஸுன்னத் 183
- ஃபஜ்ர் சாதிக் வரை உண்ணலாம் 184
- ஃபஜ்ர் காதிப், ஃபஜ்ர் சாதிக் அடையாளங்கள் 186
- ஸஹரில் அலட்சியப்படுத்தப்படும் நபிவழி 187
- ஸஹர் நேரத்தில் குளிப்பு கடமையாகி இருந்தால்... 191

2. இஃப்த்தாரை விரைவுபடுத்துவது 193

- இஃப்த்தாரில் அலட்சியப்படுத்தப்பட்ட நபிவழி 194
- விமானத்தில் நோன்பு துறத்தல் 198
- பேரீத்தம் பழத்தால் இஃப்த்தார் 198
- நோன்பு துறக்கும்போது துஆ 199

3. நோன்பு துறக்க நோன்பாளிக்கு உதவுவதின் சிறப்பு 199

- நோன்பு துறக்க உணவளித்தவருக்கான துஆ 201

4. வணக்கங்களை அதிகப்படுத்துதல் 202

1. குர்ஆன் ஓதுதல் 202
2. துஆ, திக்ர், தஸ்பீஹ் செய்தல்; ஸலவாத், இஸ்திஃபாரை அதிகமாக்குதல் 208
3. தர்மங்களை வாரி வழங்குதல் 208
4. கூச்சல் குழப்பங்களைவிட்டு ஒதுங்கியிருத்தல் 209

3 இரவுத் தொழுகை அல்லது தராவீஹ் தொழுகை 211

1. இரவுத்தொழுகையின் சிறப்புகள் 211
2. நபிவழி ஆர்வமூட்டிய றமளான் இரவுத்தொழுகை 212
3. தராவீஹ் என்றால்? 213
4. மஸ்ஜிதில் தராவீஹ் தொழுவது நபிவழி 213
5. றமளானில் நபியவர்கள் தொழ வைத்த ரக்அத்கள் 215

- நபியவர்கள் அங்கீகரித்த எண்ணிக்கை 216

- அமீருல் முஃமினீன் உமர் ﷺ உயிர்ப்பித்த நபிவழி 217
- வருடம் முழுதும் நபியவர்களின் இரவுத்தொழுகை 218

6. ரக்அத்களின் எண்ணிக்கையில் கருத்துவேறுபாடு வந்த பின்னணி 220

4 லைலத்துல் கத்ர் **222**

1. லைலத்துல் கத்ர் மறைக்கப்பட்டது; தேடுங்கள் 224
2. கடைசிப் பத்தில் தேடுங்கள் 225
3. லைலத்துல் கத்ரும் 24ஆவது இரவும் 227
4. மறைக்கப்பட்டதில் சில நன்மைகள் 228
5. முன்னறிவிப்பும் உண்டு 228

5 இஃத்திகாஃப் - மஸ்ஜிதில் தங்குதலும் கடைசிப் பத்து நாள்களின் சிறப்பும் **231**

1. கடைசிப் பத்தும் நபியவர்களும் 231
2. கடைசிப் பத்தும் இன்றைய முஸ்லிம்களும் 232
3. இஃத்திகாஃப் – சொல்லும் பொருளும் 232
4. இஃத்திகாஃபின் சட்டம் 232
5. இஃத்திகாஃபின் நோக்கம் 234
6. இஃத்திகாஃப் நிபந்தனைகள் 234
7. இஃத்திகாஃபுக்கு நோன்பு கடமையா? 236
8. பத்து நாள்கள் முடியாதவர்கள்... 237
9. இஃத்திகாஃப் நேரங்கள் 237
10. பெண்களின் இஃத்திகாஃப் 238
11. இஃத்திகாஃப் இருப்பவருக்கு அனுமதிக்கப்பட்டவை 240
12. இஃத்திகாஃபை முறிக்கக்கூடியவை 243
13. கூடாரத்திற்குள் இஃத்திகாஃப் இருப்பதின் முறை 244
14. இஃத்திகாஃபில் இருப்பவர் சிகிச்சைக்காக மருத்துவரைச் சந்தித்தல் 246

6 ஸகாத்துல் ஃபித்ர் **247**

1. ஏன் கடமை ? 247
2. யார் மீது கடமை? 248

3. எவ்வளவு கடமை? 248
4. எதைக் கொடுப்பது? 249
5. எப்போது கொடுக்க வேண்டும்? 251

7 பெருநாள் தினம் – நிறைய குதூகலம், கொஞ்சம் கவலை **255**
1. இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? 255
2. நம்முடைய சொந்தப் பெருநாள் 256

8 பெருநாள் தொழுகையின் சட்ட நிலை **259**
1. தவறாமல் நபியவர்கள் ஏவிய தொழுகை 259
2. பெண்களும் தவறக்கூடாத தொழுகை 259
3. ஜுமுஆவை விடுவதற்கு அனுமதிக்கின்ற தொழுகை 261

9 பெருநாளும் அதன் தொழுகை நேரமும் **262**
• பெருநாளைத் தீர்மானித்தல் 262
1. பெருநாள் தொழுகையின் நேரம் 263
2. பிறை பார்த்த தகவல் தாமதமாக வருதல் 264

10 பெருநாள் தொழுகையின் தொடக்கம் **266**
1. பாங்கு இகாமத் இல்லை 266
2. முன் பின் தொழுகைகள் இல்லை 267
3. இமாமுக்கு சுத்ரா அவசியம் 268

11 பெருநாள் தொழுகையின் முறை **270**
1. தூய நிய்யத்துடன் தக்பீர் கூறுதல் 270
2. இரண்டு ரக்அத்துகள் தொழுதல் 270
3. அதிகப்படியான தக்பீர்கள் கூறுதல் 271
4. தொழுகையில் ஓதும் சூராக்கள் 274
5. தொழுகையும் குத்பாவும் 274
6. பெருநாள் தொழுகை தவறிவிட்டால் 277

12 பெருநாளில் விரும்பத்தக்க ஒழுங்குகள் **278**
1. பெருநாள் தொழுகைக்காகக் குளித்துக்கொள்வது 278
2. சிறந்த ஆடையை உடுத்திக்கொள்வது 278
3. பேரீச்சம் பழங்களை உண்ணுவது 279

4. ஹஜ்ஜுப் பெருநாளில் குர்பானியின் இறைச்சியைச் சாப்பிடும் வரை சாப்பிடுவதைப் பிற்படுத்துவது 280
5. ஒரு பாதையில் சென்று வேறு பாதையில் 280
6. அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி தக்பீர் சொல்வது 280
7. வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்வது 284
• பெருநாளும் பொழுதுபோக்கும் 284
13 உபரியான நோன்புகள் 287
• கடைசிச் சொற்கள் 287
1. ஷவ்வாலின் ஆறு நோன்புகள் 288
2. துல் ஹஜ்ஜு ஒன்பதின் அரஃபா நோன்பு 289
3. முஹர்ரம் மாத நோன்புகள் 291
4. ஷஅபான் மாத நோன்புகள் 293
5. திங்கள், வியாழக்கிழமைகளில் நோன்பு 294
6. மாதத்தில் மூன்று நாள்களின் நோன்பு 295
7. ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு 296
• உபரி நோன்புகளின் சட்டம் 298
• வெறுக்கப்பட்ட (மக்ரூஹ்) நோன்புகள் 299
1. விஸால் எனும் தொடர் நோன்பு 299
2. காலம் முழுவதும் நோன்பிருத்தல் 300
3. வெள்ளிக்கிழமையில் மட்டும் நோன்பிருத்தல் 301
4. சனிக்கிழமையில் நோன்பிருத்தல் 302
• தடைசெய்யப்பட்ட நோன்புகள் 303
1. இரண்டு ஈது பெருநாள்களில் நோன்பிருத்தல் 303
2. அய்யாமுத் தஷ்ரீக்கில் நோன்பிருத்தல் 304
3. றமளானுக்கு ஓரிரு நாள்களுக்கு முன் நோன்பிருத்தல் 305

2

அள்ள அள்ள நன்மைகள் – அதுதான் றமளான்

❀

1. றமளான் – சொர்க்கத்தின் மாதம்

றமளானின் வருகையை நபியவர்கள் எத்தனை விதமாக வருணித்திருக்கிறார்கள், கேளுங்கள்:

إِذَا دَخَلَ شَهْرُ رَمَضَانَ فُتِّحَتْ أَبْوَابُ السَّمَاءِ، وَغُلِّقَتْ أَبْوَابُ جَهَنَّمَ، وَسُلْسِلَتِ الشَّيَاطِينُ

றமளான் மாதம் நுழைந்துவிட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன; ஷைத்தான்கள் சங்கிலியால் விலங்கிடப்படுகின்றன. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, புகாரீ 1899)

إِذَا جَاءَ رَمَضَانُ فُتِّحَتْ أَبْوَابُ الْجَنَّةِ وَغُلِّقَتْ أَبْوَابُ النَّارِ وَصُفِّدَتِ الشَّيَاطِينُ

றமளான் மாதம் வந்துவிட்டால் சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன; ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, முஸ்லிம் 2547)

إِذَا كَانَ رَمَضَانُ فُتِّحَتْ أَبْوَابُ الرَّحْمَةِ وَغُلِّقَتْ أَبْوَابُ جَهَنَّمَ وَسُلْسِلَتِ الشَّيَاطِينُ

றமளான் மாதம் ஏற்பட்டுவிட்டால் அருளின் வாசல்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன; ஷைத்தான்கள் சங்கிலியால் விலங்கிடப்படுகின்றன. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, முஸ்லிம் 1079)

அல்லாஹ்வுடைய அருளின் வாசல்கள் திறக்கப்பட்டு அவை வானத்தின் வாசல்கள் வழியாக பூமிக்கு இறங்குகின்றன. வானம் பொத்துக்கொண்டு மழை பொழிகிற காலம் நமக்குத் தெரியும். ஆனால், வானத்தின் வாசல்கள் திறந்துகொண்டு அல்லாஹ்வின் அருள் பொழியும் காலம் தெரியுமா? அதுதான் றமளான். இதைக்

3

நோன்பு ஒரு மகத்தான கடமை

❀

அறபு மொழியில் நோன்பை 'அஸ்ஸியாம்' அல்லது 'அஸ்ஸவ்ம்' என்பார்கள். அகராதிப்படி இந்தச் சொற்களுக்கு அர்த்தம் 'நிறுத்திக் கொள்ளுதல்' என்பதாகும். உதாரணமாக,

إِنِّي نَذَرْتُ لِلرَّحْمَٰنِ صَوْمًا

'நிச்சயமாக நான் அர்ரஹ்மான் ஆகிய அளவற்ற அருளாளன் அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கிறேன்' (குர்ஆன் 19:26)

என்று மக்களிடம் கூறிவிடும்படி அன்னை மர்யம் ﵂ அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். இங்கு 'ஸவ்ம்' என்பது பேச்சை நிறுத்திக்கொண்ட மவுனத்தைக் குறிக்க வந்துள்ளது. அக்காலத்தில் மவுன விரதத்திற்கு அனுமதி இருந்தது. நோன்பில் அதுவும் ஒரு வகை. அதைக்கொண்டு பேச்சை நிறுத்திக்கொள்வார்கள். கன்னிப்பெண்ணாக, திருமணம் செய்யப்படாத நிலையில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால், ஊர் வாயை மூட முடியுமா என்ன? ஒவ்வொருத்தருக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா என்ன? எனவே, மர்யம் ﵂ அவர்கள் பேசுவதை நிறுத்திக் கொள்ளும் நோன்பைக் கடைப்பிடித்தார்கள். 'ஸவ்ம்' என்றால் நிறுத்திக்கொள்ளுதல்.

குர்ஆனில் இரண்டு வகையான ஸவ்ம் கூறப்பட்டுள்ளது. ஒன்று, மேலே கூறப்பட்ட மர்யம் ﵂ அவர்களின் வார்த்தைகளில் கூறப்படுவது. அதாவது, வாய்மூடி அமைதியாக இருப்பதைக் குறிப்பது. இரண்டாவது, இன்று அனைவரும் அறிந்து வைத்துள்ள இஸ்லாமிய வழக்கத்திலுள்ள ஸவ்ம். அதாவது, சூரிய உதயத்திற்கு முன்பிருந்து சூரியன் மறையும் வரை உண்ணல், குடித்தல், உடலுறவு கொள்ளல் ஆகிய இன்பங்களை நிறுத்திக்கொள்வது. (அல்லுபாப் ஃபீ ஃபிக்ஹிஸ்ஸுன்னத்தி வல்கிதாப், முஹம்மது ஸுப்ஹி இப்னு ஹசன் ஹல்லாக்)

4

நோன்பு கடமையான வரலாறு

❀

நபி ﷺ அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவிற்கு வந்து ஒன்றரை ஆண்டு சென்ற பிறகுதான் இந்நோன்பு கடமையானது. இதற்கு முன்பு, முஸ்லிம்கள் முஹர்ரம் மாத ஆஷூரா நாளும், மாதத்திற்கு மூன்று நாள்களும் நோன்பு நோற்று வந்தார்கள். (தஃப்சீர் இப்னு கஸீர் 1/497)

ஆயிஷா ؓ அவர்கள் சொல்கிறார்கள்:

أَنَّ قُرَيْشًا كَانَتْ تَصُومُ يَوْمَ عَاشُورَاءَ فِي الجَاهِلِيَّةِ، ثُمَّ أَمَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِصِيَامِهِ حَتَّى فُرِضَ رَمَضَانُ، وَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَنْ شَاءَ فَلْيَصُمْهُ وَمَنْ شَاءَ أَفْطَرَ

அறியாமைக் காலத்தில் குறைஷியர் ஆஷூரா அன்று நோன்பு நோற்று வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் அந்நாளில் நோன்பு நோற்று வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் மதீனாவுக்கு நாடு துறந்து சென்றதும் (அங்கும்) ஆஷூரா நோன்பு நோற்றார்கள். அந்நாளில் நோன்பு நோற்குமாறு (மக்களுக்கும்) கட்டளையிட்டார்கள். றமளான் நோன்பு கடமையாக்கப்பட்ட தும், 'நாடியவர் ஆஷூரா நோன்பு நோற்கலாம்; நாடியவர் அதை விட்டுவிடலாம்' என்று கூறிவிட்டார்கள். (புகாரீ 1893, முஸ்லிம் 2068)

1. இரண்டு கட்டங்கள்

இந்த நோன்பு இரண்டு கட்டங்களாகக் கடமையாக்கப்பட்டது.

முதல் கட்டம்: நோன்பு நோற்பதை அவரவர் விருப்பத்திற்கு அல்லாஹ் விட்டிருந்தான். விரும்பினால் நோன்பு நோற்கலாம். இல்லையெனில், அதற்குப் பதில் உணவளிக்கலாம். ஆனால்,

5

நோன்பின் கூலி இவ்வளவு என்றில்லை

❀

1. நோன்பாளி – தனித்துவமான விசுவாசி

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களின் முக்கியமான பண்பு களில் ஒன்றாக நோன்பு நோற்கும் பண்பை அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான். அவர்களுக்குச் சொர்க்க நற்செய்தியும் கூறுகிறான்:

التَّائِبُونَ الْعَابِدُونَ الْحَامِدُونَ السَّائِحُونَ الرَّاكِعُونَ السَّاجِدُونَ الْآمِرُونَ بِالْمَعْرُوفِ وَالنَّاهُونَ عَنِ الْمُنْكَرِ وَالْحَافِظُونَ لِحُدُودِ اللَّهِ وَبَشِّرِ الْمُؤْمِنِينَ

இந்தக் கூலியைப் பெறக்கூடியவர்கள்தாம் இணைவைப்பிலிருந் தும் நயவஞ்சகத்தனத்திலிருந்தும் பாவங்களிலிருந்தும் மீண் டவர்கள்; வணக்க வழிபாட்டை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கியவர்கள்; எல்லா நிலைகளிலும் தங்கள் இறைவனைப் புகழக்கூடியவர்கள்; அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதிற்காக பயணிக்கக்கூடியவர்கள்; நோன்பு நோற்கக்கூடியவர்கள்; தொழக்கூடியவர்கள்; அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கட்டளையிட்டதைக் கொண்டு கட்டளையிடுபவர்கள்; அல்லாஹ் வும் அவனுடைய தூதரும் தடுத்தவற்றை தடுப்பவர்கள்; அல் லாஹ்வின் கட்டளைகளைச் செயல்படுத்தி அவன் தடுத்துள்ள வற்றிலிருந்து விலகி அவனுடைய வரம்புகளைப் பேணக்கூடிய வர்கள். தூதரே! இந்த பண்புகளைப் பெற்ற நம்பிக்கையாளர் களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவர்களுக்கு மகிழ்ச்சியளிக் கக்கூடியது உண்டென நற்செய்தி கூறுவீராக. (குர்ஆன் 9:112)

இன்னொரு வசனத்தில், தன் நபிக்குச் சிறந்த பெண்களை மண முடித்து வைப்பதைச் சொல்லும்போதும் குறிப்பாக அவர்கள் நோன்பு நோற்கும் பண்புள்ளவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக் காட்டுகிறான். நம்முடைய தாய்மார்கள், அதாவது நபியவர்களின் மனைவிகள் தவறுசெய்ததைக் கண்டிக்கும்போது

1

பிறையை அணுகும் முறை

❀

1. பிறை பார்ப்பது ஏன்?

நமது வணக்க வழிபாடுகளின் நேரங்கள் சூரியன், சந்திரனின் சுழற்சிகளை வைத்து நிர்ணயிக்கப்படும். அதிகாலை (சுப்ஹ்), மதியம் (லுஹர்), மாலை (அஸர்), சூரிய அஸ்தமம் (மஃரிப்), இரவு (இஷா) என்ற ஒரு நாளின் சூரிய ஒளி நிலைகளைக் கொண்டு ஐவேளைத் தொழுகையின் நேரங்கள் குறிக்கப்படு கின்றன. இதே நோன்பு, ஹஜ்ஜு ஆகிய வணக்கங்களுக்கு சூரியச் சுழற்சி கணக்கிடப்படாது. காரணம், இந்த வணக்கங்கள் குறிப்பிட்ட நாள்களின் வருகையைக் கொண்டு செய்யப்படுவன. அதற்குச் சந்திரனின் தேய்தல், வளர்தல் நிலைகள்தான் வசதியாக இருக்கும்.

يَسْأَلُونَكَ عَنِ الْأَهِلَّةِ قُلْ هِيَ مَوَاقِيتُ لِلنَّاسِ وَالْحَجِّ

(நபியே) பிறைகள் பற்றி உங்களிடம் கேட்கிறார்கள். கூறுங்கள்: அவை மக்களுக்குக் காலம் காட்டுபவையாகவும், ஹஜ்ஜை அறிவிப்பவையாகவும் உள்ளன. (குர்ஆன் 2:189)

இமாம் இப்னு கஸீர் ﵀ இவ்வசனத்தின் விளக்கத்தில் எழுதுகிறார்கள்: மக்கள் நபியவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதரே, பிறைகள் எதற்காகப் படைக்கப்பட்டன?' என்று கேட்டார்கள். அப்போது தான் இந்த வசனத்தை அல்லாஹ் இறக்கினான் என்று ரபீஉ ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது முஸ்லிம்கள் நோன்பு நோற்பதற்கும், நோன்பை விட்டுவிடுவதற்கும், முஸ்லிம் பெண் களின் இத்தா (விவாகரத்து அல்லது கணவர் இறப்புக்குப் பின் மறுமணம் செய்ய தடுக்கப்பட்ட காத்திருப்பு) காலத்தைக் கணக்கிடு வதற்கும், கடன் தவணையின் காலத்தை அறிவதற்கும் கருவிகளாகப் பிறைகளை அல்லாஹ் ஆக்கியுள்ளான்.

2

விஞ்ஞானக் கணக்கீடு செய்பவர்களின் தவறான வாதங்களும் பதில்களும்



விஞ்ஞானக் கணக்கீட்டின் அடிப்படையில் நோன்பு நோற்பதும், விடுவதும் ஹறாம், பித்அத் என்பது குறித்த விளக்கத்தைப் பல கோணங்களில் விவரிக்கலாம். இப்படிப்பட்ட மக்களின் வாதங்களுக்குத் தெளிவான பதிலை அளிப்பதே இதற்குப் போதுமானது. இனி அம்மக்களின் ஒவ்வொரு வாதங்களையும் நம்முடைய பதில்களையும் பார்ப்போம்.

'ஆதாரங்களில் சிலதை மட்டும் பிடித்துக்கொண்டு, குறிப்பாக குர்ஆன் வசனங்களை மட்டுமே அணுகுவது. தமது கருத்துக்கு நெருக்கமாகத் தெரியும் ஆதாரத்தையே முடிவானதாக நம்பி, அதற்கு ஏற்ப மற்ற ஆதாரங்களை விளக்குவது. அறபு அகராதிப்படி மாற்று அர்த்தங்களை முன்வைத்து புதிய அபிப்ராயங்களைச் சமுதாயத்தில் பரப்புவது.'

இது ஒரு பெரிய பிரச்சினை. அடிப்படை பிரச்சினையும் கூட. விஞ்ஞானக் கணக்கு கூடும் என்போரிடம் வெளிப்படையாகத் தெரியும் பிரச்சினை. ரொம்பத் துணிச்சலாக, அசட்டுத்தனமாக அவர்களின் கருத்தை நிலைநாட்ட முயற்சி செய்கிறார்கள். அவர்களது அறியாமை, அவர்களைப் பெரியதோர் அபாயத்தில் தள்ளிச் செல்வதை நினைத்தால், கண்ணீர்தான் வருகிறது.

1. மூன்றுவித அறியாமைகள்

1. ஆதாரங்களை அணுகும்போது இம்மக்கள் குர்ஆனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் ஸுன்னாவுக்குக் கொடுப்பதில்லை. (இதை அவர்கள் மறுக்கலாம். குர்ஆன், ஹதீஸ் இரண்டுமே மார்க்கம்தான் என்று கொள்கை விளக்கம் கொடுக்கலாம். ஆனால், நடைமுறை அப்படியல்ல.)

3

நோன்பு யாருக்குக் கடமை?



1. நோன்பு கடமையாகும் நிபந்தனைகள்

நான்கு நிபந்தனைகள் பூர்த்தியாகின்ற ஒவ்வோர் ஆண், பெண்மீதும் நோன்பு கடமையாகிவிடும். அவை:

1. இஸ்லாம்

காஃபிர் மீது கடமை இல்லை. ஆனால், ஒரு காஃபிர் றமளானின் நோன்பு நேரத்தில் முஸ்லிமாகிவிட்டால், அவர் அப்படியே நோன்பிருக்க வேண்டும். அவர் முஸ்லிமாகும் நேரம் அஸர் நேரமாகவே இருந்தாலும் இஃப்தார் வரை அவருக்கு நோன்பு கடமை.

ஒரு கேள்வியும் பதிலும்: ஏன் இவர் அடுத்த நாளிலிருந்து நோன்பு நோற்கலாமே? முஸ்லிமான பகலிலிருந்தே அவர் நோன்பு கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு என்ன ஆதாரம்?

விளக்கம் இதுதான்: ஏதேனும் ஒரு கட்டளை நிபந்தனையுடன் விதிக்கப்படும்போது, மார்க்கரீதியாக அதைச் செயல்படுத்துவதில் ஒரு முஸ்லிம் சக்தியுள்ளவராக இருந்தால், அவர் அதைச் செயல் படுத்துவது கடமையாகிவிடும். ஃபிக்ஹ் சட்டத்தில் இது ஓர் அடிப்படை விதி. இதை நபியவர்கள் செயல்படுத்தியதற்கு ஆதாரம் இருக்கிறது.

உதாரணமாக, ஆஷூறா நோன்பைக் குறிப்பிடலாம். றமளான் நோன்புக்கு முன்பு இந்த நோன்பை நபி ﷺ அவர்கள் கடமை யாக்கினார்கள். மதீனாவுக்கு வந்த முதல் வருடம் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தினார்கள். (அடுத்த வருடம் றமளான் நோன்பு கடமையானவுடன், ஆஷூறாவை அவரவர் விருப்பத்திற்கு விடப்பட்டது.) ஆஷூறாவைக் கடமையாக்கியபோது நபியவர்

8

நோன்பை முறிக்கும் காரணங்கள்

❀

1. உண்ணல், பருகுதல்

உணவையோ குடிப்பையோ வாய் வழியாக அல்லது மூக்கின் வழியாக உடலினுள் சேர்ப்பது. அது எந்த வகை உணவாக, குடிப்பாக இருந்தாலும் சரியே. ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான்:

وَكُلُوا وَاشْرَبُوا حَتَّى يَتَبَيَّنَ لَكُمُ الْخَيْطُ الْأَبْيَضُ مِنَ الْخَيْطِ الْأَسْوَدِ مِنَ الْفَجْرِ ثُمَّ أَتِمُّوا الصِّيَامَ إِلَى اللَّيْلِ

அதிகாலை எனும் வெள்ளை நூல் (இரவு எனும்) கருப்பு நூலிலிருந்து தெளிவாகும் வரை உண்ணுங்கள்; பருகுங்கள். பின்னர், இரவு வரை நோன்பைப் பூர்த்தியாக்குங்கள். (குர்ஆன் 2:187)

மூக்கு வழியாக செலுத்துவதும், உண்பதையும் பருகுவதையும் போன்றதுதான். ஏனெனில், நபி ﷺ அவர்கள் லகீத் பின் ஸப்ரா ﷺ எனும் தோழரை நோக்கி கூறினார்கள்:

وَبَالِغْ فِي الاِسْتِنْشَاقِ إِلاَّ أَنْ تَكُونَ صَائِمًا

நீ தண்ணீரை நன்கு மூக்கினுள் செலுத்திச் சுத்தம் செய். ஆனால், நீ நோன்பாளியாக இருந்தாலே தவிர. (அப்போது அவ்வாறு செய்யாதே.) (அபூ தாவூது 2366, ஸஹீஹ் ஜாமிஃ 927)

நறுமணம் நுகர்வதால் நோன்பு முறியாது

ஆனால், மணக்கும் பொருள்களை நுகர்வது நோன்பை முறிக்காது. ஏனெனில், உடலினுள் செல்லும்படியான தடிப்பம் எதுவும் மணத்திற்குக் கிடையாது.

9

நோன்பு முறிவு நிபந்தனைகள்

❀

நோன்பை முறிக்கக் கூடியவையாக முந்திய தலைப்பில் குறிப்பிட்ட விசயங்கள் நிகழ்ந்த பிறகும், ஒருவர் தம்முடைய நோன்பு முறிந்து விட்டதா, இல்லையா என்பதை உறுதிப்படுத்த மூன்று நிபந்தனைகள் அவசியம்.

1. நோன்பாளி அறிந்தவராக இருப்பது

அதாவது, நோன்பை முறிக்கக்கூடியதன் சட்டம் பற்றி அறியாதவராக இருந்தால் அது நோன்பை முறிக்காது. ஏனெனில், அல்லாஹ் நமக்கு கீழ்வரும் பிரார்த்தனையைக் கற்றுக்கொடுத்துள்ளான்:

رَبَّنَا لاَ تُؤَاخِذْنَا إِنْ نَسِينَا أَوْ أَخْطَأْنَا) قَالَ قَدْ فَعَلْتُ

எங்கள் இறைவனே! நாங்கள் மறந்துவிட்டாலோ, தவறுதலாகச் செய்துவிட்டாலோ எங்களைக் குற்றம் பிடிக்காதே! *(2:286)*

இந்தப் பிரார்த்தனைக்கு 'அப்படியே செய்தேன்' என்று அல்லாஹ் பதிலளித்தான். *(அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ﷺ, முஸ்லிம் 126)*
அதிய்யி இப்னு ஹாத்திம் ﷺ கூறுகிறார்கள்:

عَـنْ عَـدِيِّ بْنِ حَاتِمٍ - رضى الله عنه - قَالَ لَمَّا نَزَلَتْ (حَـتَّى يَتَبَيَّنَ لَكُمُ الْخَيْطُ الأَبْيَضُ مِنَ الْخَيْطِ الأَسْـوَدِ مِنَ الْفَجْرِ) قَالَ لَهُ عَدِيُّ بْنُ حَاتِمٍ يَا رَسُولَ اللَّهِ إِنِّي أَجْعَلُ تَحْتَ وِسَادَتِي عِقَالَـيْنِ عِقَـالاً أَبْيَضَ وَعِقَالاً أَسْـوَدَ أَعْرِفُ اللَّيْلَ مِنَ النَّهَارِ فَقَالَ رَسُـولُ اللَّهِ -صلى الله عليه وسلم- إِنَّ وِسَادَتَكَ لَعَرِيضٌ إِنَّمَا هُوَ سَوَادُ اللَّيْلِ وَبَيَاضُ النَّهَارِ

'கருப்பு நூலிலிருந்து வெள்ளை நூல் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்வரை உண்ணுங்கள்; பருகுங்கள்' *(2:187)* எனும் வசனம் இறங்கியபோது நான் இரண்டு கயிறுகளை எடுத்தேன். ஒன்று, வெள்ளை; மற்றொன்று கருப்பு. அவற்றை எனது தலையணையின் கீழ் வைத்து அவ்விரண்டையும் பார்த்துக்கொண்டிருந்தேன்.

10

ஃபித்யா மற்றும் கஃப்பாரா சட்டங்கள்

❀

1. ஃபித்யா சட்டம்

ஏதேனும் ஒன்றின் சார்பாகப் பரிகாரம் செய்வதற்கு பித்யா எனப்படும். நோன்பு எனும் கட்டாயக் கடமையைச் சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளால் விட்டுவிடும்போது அதன் சார்பாக செய்கின்ற பரிகாரத்தை இங்கு ஃபித்யா என்கிறோம்.

❊ ஃபித்யா கொடுக்க வேண்டியவர்கள்

1. நோன்பு நோற்கும் சக்தி இல்லாமலும், தொடர்ச்சியான இயலாமையாலும், புற்றுநோய் போன்ற நிரந்தர வியாதியாலும் நோன்பை விட்டுவிட்டவர்.

عَنْ عَطَاءٍ سَمِعَ ابْنَ عَبَّاسٍ يَقْرَأُ {وَعَلَى الَّذِينَ يُطَوَّقُونَهُ فِدْيَةٌ طَعَامُ مِسْكِينٍ} قَالَ ابْنُ عَبَّاسٍ لَيْسَتْ بِمَنْسُوخَةٍ هُوَ الشَّيْخُ الْكَبِيرُ وَالْمَرْأَةُ الْكَبِيرَةُ لاَ يَسْتَطِيعَانِ أَنْ يَصُومَا فَلْيُطْعِمَانِ مَكَانَ كُلِّ يَوْمٍ مِسْكِينًا.

அதாஉ இப்னு அபீ ரபாஹ் ﷺ அவர்கள் கூறியதாவது: '... நோன்பு நோற்கச் சிரமப்படுகின்றவர்கள் அதற்குப் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும்' (2: 184) என்ற இவ்வசனத்தை ஓதிவிட்டு இப்னு அப்பாஸ் ﷺ சொல்வார்கள்: 'இது சட்டம் மாற்றப்பட்ட வசனம் அல்ல; நோன்பு நோற்க இயலாத தள்ளாத முதியவரையும் தள்ளாத வயதுடைய பெண்ணையும் இது குறிக்கும். அவர்கள் ஒவ்வொரு நாள் நோன்புக்கும் பகரமாக ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும்.' (புகாரீ 4505, இர்வாஉல் கலீல் 912)

2. ஒருவர் நோன்பு களாவான நிலையில் இறந்துவிட்டார். அவருடைய நோன்பை களா செய்ய பொறுப்பாளரும் இல்லை;

2

நோன்பின் ஸுன்னத்துகள்

❀

நோன்பாளி அதிக நன்மைகளைப் பெற வேண்டுமாயின், அவர் தம் நோன்பை நபிவழிப்படி அமைத்துக்கொள்வது அவசியம். அதற்குக் கீழே உள்ள விரும்பத்தக்க ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டும்.

1. ஸஹர்

ஸஹர் நேரம் என்பது இரவின் கடைசிப் பகுதி நேரம். அந்தப் பின்நேரம் முடியும்போது ஃபஜ்ர் தொடங்கிவிடும். இந்தக் கடைசி நேரத்தில் உண்ணப்படுகிற உணவை ஸஹர் உணவு என்கிறோம்.

❊ ஸஹர் செய்வது பரக்கத்

تَسَحَّرُوا فَإِنَّ فِي السَّحُورِ بَرَكَةً

‘ஸஹர் செய்யுங்கள். நிச்சயமாக ஸஹர் செய்வதில் பரக்கத் இருக்கிறது.’ (அறிவிப்பு: அனஸ் ﷺ, புகாரீ 1923, முஸ்லிம் 1095)

فَصْلُ مَا بَيْنَ صِيَامِنَا وَصِيَامِ أَهْلِ الْكِتَابِ أَكْلَةُ السَّحَرِ

‘நமது நோன்பிற்கும் வேதக்காரர்களின் நோன்பிற்கும் இடையிலுள்ள வேறுபாடு ஸஹர் நேரத்தில் உண்பதுதான்.’ (அறிவிப்பு: அம்ர் இப்னு அல்ஆஸ் ﷺ, முஸ்லிம் 1096)

ஸஹர் உணவுக்குப் பெரிய சிறப்பு இருப்பதால், முடிந்த வரை அதை நிறைவேற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். எந்தளவு என்றால், ஒரு மடக்குத் தண்ணீராவது குடித்துவிடுவது நபிவழி.

السُّحُورُ أَكْلَةُ بَرَكَةٌ أَعْطَاكُمُوهَا اللهُ - عزّ وجل - فَلَا تَدَعُوهَا وَلَوْ أَنْ يَجْرَعَ أَحَدُكُمْ جَرْعَةً مِنْ مَاءٍ، فَإِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى الْمُتَسَحِّرِينَ

‘ஸஹர் நேரத்தில் உண்பது பரக்கத் நிறைந்தது. அதை விட்டு விடாதீர்கள். ஒரு மிடறு தண்ணீராவது குடியுங்கள். ஸஹர்

3

இரவுத் தொழுகை அல்லது தராவீஹ் தொழுகை

❀

வணக்க வழிபாடுகளை கடமையாக்கியுள்ள அல்லாஹ், அவற்றில் முதன்மையான வணக்கமாகத் தொழுகையை ஆக்கியுள்ளான். தொழுகை, நம் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தப்படுத்துகிறது. இறைநெருக்கத்தையும் நேசத்தையும் அதிகமாக்கிக்கொள்ள ஓர் அழகிய வழியாக அமைந்திருக்கிறது. நாளொன்றுக்கு ஐவேளைத் தொழுகைகள் நமக்குக் கட்டாயக் கடமை. செயலைப் பொறுத்து ஐந்தாக இருந்தாலும், மதிப்பீட்டில் ஐம்பது தொழுகைகளுக்குச் சமமானவை. எனினும், அல்லாஹ் இத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை. விருப்பத்தின் அடிப்படையிலான தொழுகைகளையும் கூடுதலாக வழங்கினான். கடமையான தொழுகைகளில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்; அல்லாஹ்வின் பக்கம் மேன்மேலும் நெருக்கம் ஏற்பட வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம். கடமையான தொழுகைகளுக்கு முன்னும் பின்னும் நிறைவேற்றப்படும் ஸுன்னத் தொழுகைகளும் தஹஜ்ஜுத், தராவீஹ் என்று அழைக்கப்படுகிற இரவுத் தொழுகையும் இந்த நோக்கத்திற்காகவே ஆர்வமூட்டப்பட்டுள்ளன.

1. இரவுத்தொழுகையின் சிறப்புகள்

இரவுத் தொழுகையை நிலைநாட்டும் அடியார்களை அல்லாஹ்வே புகழ்ந்து பேசுகிறான்:

وَالَّذِينَ يَبِيتُونَ لِرَبِّهِمْ سُجَّدًا وَقِيَامًا

இன்னும் அவர்கள் தங்கள் இறைவனை நின்றவர்களாகவும் சிரம்பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்கிக் கொண்டு இருப்பார்கள். (குர்ஆன் 25:64)

وَأَفْضَلُ الصَّلاَةِ بَعْدَ الْفَرِيضَةِ صَلاَةُ اللَّيْلِ

4

லைலத்துல் கத்ர்

❀

றமளானின் கடைசிப் பத்து நாள்களுக்குள்தான் லைலத்துல் கத்ர் எனும் மகத்துவமிக்க இரவு இருக்கிறது. அந்த இரவின் சிறப்புகளை குர்ஆனும் நபிமொழிகளும் மிக அழுத்தமாகச் சொல்கின்றன.

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ وَمَا أَدْرَاكَ مَا لَيْلَةُ الْقَدْرِ لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ تَنَزَّلُ الْمَلَائِكَةُ وَالرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِمْ مِنْ كُلِّ أَمْرٍ سَلَامٌ هِيَ حَتَّى مَطْلَعِ الْفَجْرِ

நிச்சயமாக நாம் இதை (குர்ஆனை) கண்ணியமிக்க இரவில் இறக்கினோம். மேலும், கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களைவிட மிக மேலானதாகும். அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின்படி சகல காரியங்களுடன் இறங்குகின்றனர். அமைதி (நிலவும்); அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும். (குர்ஆன் 97:1-5)

குர்ஆன் இறங்கிய இரவை மிகவும் கண்ணியமிக்க இரவு - லைலத்துல் கத்ர் என்று அல்லாஹ் புகழ்கிறான்.

1. அந்த இரவு ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்தது. அதாவது, ஆயிரம் மாதங்கள் ஒருவர் வணக்கங்களில் ஈடுபட்டுப் பெறுகிற நன்மைகளைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை இந்த ஓர் இரவை அடைவதின் மூலம் பெற முடியும்.

2. அந்த இரவில் மலக்குகளின் சிறப்பு வருகை நடக்கின்றது. அவர்களுடன் அவர்களின் தலைவர் ஜிப்ரீல் ﷺ அவர்களும் வருகிறார்கள்.

3. ஜிப்ரீலும் அவர்களது படையும் இறங்குவதின் காரணம், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளைக் கொண்டு வருகிறார்கள்.

5

இஃத்திகாஃப் – மஸ்ஜிதில் தங்குதலும் கடைசிப் பத்து நாள்களின் சிறப்பும்

❀

1. கடைசிப் பத்தும் நபியவர்களும்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய வணக்க வழிபாடுகள் மற்ற நாள்களைவிட ரமளானின் கடைசிப் பத்து நாள்களில்தான் அபரிமிதமான தேட்டத்துடன் அமைந்திருக்கும். அதுவே இந்த நாள்களின் சிறப்புகளை உணர்வதற்குப் போதுமானது.

ஆயிஷா ؓ கூறுகிறார்கள்:

كَانَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- يَجْتَهِدُ فِى الْعَشْرِ الأَوَاخِرِ مَا لاَ يَجْتَهِدُ فِى غَيْرِهِ

நபி ﷺ அவர்கள் மற்ற நாள்களில் காட்டாத ஈடுபாட்டை, கடைசிப் பத்து நாள்களில் காட்டுவார்கள். (முஸ்லிம் 1175)

மேலும் கூறுகிறார்கள்:

كَانَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- إِذَا دَخَلَ الْعَشْرُ أَحْيَا اللَّيْلَ وَأَيْقَظَ أَهْلَهُ وَجَدَّ وَشَدَّ الْمِئْزَرَ

இறுதிப் பத்து துவங்கிவிட்டால், நபி ﷺ அவர்கள் (வணக்கங்களின் மூலம்) இரவுகளுக்கு உயிரூட்டுவார்கள்; தம் துணைவியரையும் விழிக்கச் செய்வார்கள். (வழக்கத்தைவிட வழிபாட்டில்) அதிக கவனம் செலுத்துவார்கள்; தமது கீழாடையை இறுகக் கட்டிக் கொள்வார்கள். (முஸ்லிம் 1174)

அதாவது, இந்த இறுதிப் பத்து நாள்கள் வந்துவிட்டால், நபி ﷺ அவர்கள் தாம்பத்திய உறவை முற்றிலுமாக நிறுத்திக்கொள்வார்கள். குர்ஆன் ஓதுதல், திக்ர், தஸ்பீஹ் செய்தல், துஆக்களை அதிகம் கேட்டல் என்று வணக்க வழிபாடுகளிலேயே மூழ்கி இருப்பார்கள். இதற்காகத் தம் குடும்பத்தினரையும் தூண்டி ஆர்வமூட்டுவார்கள்.

6

ஸகாத்துல் ஃபித்ர்

❀

றமளானின் இறுதியில், பெருநாள் தொழுகைக்கு முன்பு ஸகாத்துல் ஃபித்ர் எனும் தர்மத்தை வழங்குவது நமக்குக் கடமை.

1. ஏன் கடமை ?

ஈகை, உதவி, பரிவு போன்ற நற்குணங்கள் வளர வேண்டும். ஏழைகளுக்கு உதவ வேண்டும். பெருநாள்களில் கூட கையேந்தி யாசிப்பவர்களாக அவர்களை விடக் கூடாது. செல்வந்தர்கள் மட்டுமின்றி ஏழைகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும். இதைக் கொண்டு அந்த நாள் எல்லோருக்கும் பெருநாள் ஆகவேண்டும்.

- நோன்புக் காலங்களில் ஏதேனும் குறைபாடு, வீணான சொல், செயல், பாவம் போன்றவை நோன்பாளியிடம் ஏற்பட்டிருந்தால் அவற்றுக்குப் பரிகாரமாக வேண்டும்.
- றமளான் நோன்பை முழுமையாக நோற்கவும் இரவில் நின்று வணங்கிடவும் முடிந்த அளவில் நல்லமல்கள் செய்திடவும் அல்லாஹ் அருள் புரிந்தான். அதற்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இப்படி இந்த எல்லா அம்சங்களையும் ஒருங்கே கொண்டதுதான் ஸகாத்துல் ஃபித்ர். இந்த நன்மைகளை நாம் அடைவதற்காகவே இது கடமையாகியுள்ளது.

இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

فَرَضَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- زَكَاةَ الْفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ وَطُعْمَةً لِلْمَسَاكِينِ

வீணான, பாலுணர்வு தொடர்பான சொல், செயல்களில் (ஏதேனும் நிகழ்ந்திருந்தால் அவற்றில்) இருந்து நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும் ஏழைகளுக்கு உணவாக அமையவுமே

11

பெருநாள் தொழுகையின் முறை

❀

பெருநாள் தொழுகை பொதுவாக ஃபஜ்ர் மற்றும் ஜுமுஆ தொழுகைகளைப் போன்றதுதான். ஆனால், அதிகப்படியான தக்பீர்களைச் சொல்வதின் மூலம் வித்தியாசப்படுகிறது.

1. தூய நிய்யத்துடன் தக்பீர் கூறுதல்

எந்த வணக்கமாக இருந்தாலும் அதற்கு மனத்தூய்மையுடன் நிய்யத் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியை நாடியும் நபி ﷺ அவர்களின் வழிமுறையைப் பின்பற்றியும் செய்கின்ற எண்ணத்திற்குப் பெயர்தான் நிய்யத். இதற்கென்று தனி வாசகங்கள் இல்லை. அப்படி வார்த்தைகளால் மொழிவது பித்அத்தும் கூட. பெருநாள் தொழுகையும் மற்ற தொழுகைகள்போல தக்பீராத்துல் இஹ்ராம் எனப்படும் முதல் தக்பீருடன் தூய எண்ணத்துடன் தொடங்கப்பட வேண்டும்.

2. இரண்டு ரக்அத்துகள் தொழுதல்

உமர் ؓ கூறுகிறார்கள்:

صَلاَةُ الأَضْحَى رَكْعَتَانِ، وَصَلاَةُ الْجُمُعَةِ رَكْعَتَانِ، وَصَلاَةُ الْفِطْرِ رَكْعَتَانِ، وَصَلاَةُ الْمُسَافِرِ رَكْعَتَانِ تَمَامٌ غَيْرُ قَصْرٍ عَلَى لِسَانِ نَبِيِّكُمْ، وَقَدْ خَابَ مَنِ افْتَرَى.

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை இரண்டு ரக்அத்களாகும். ஜுமுஆ தொழுகை இரண்டு ரக்அத்துகளாகும். நோன்புப் பெருநாள் தொழுகையும் இரண்டு ரக்அத்துகளாகும். பயணியின் தொழுகையும் இரண்டு ரக்அத்துகளாகும். இவற்றைச் சுருக்கி விடாமல் முழுமையாகத் தொழ வேண்டும். இது உங்கள் நபியின் நாவிலிருந்து வந்த வார்த்தை. எவன் இதில் பொய் சொல்கிறானோ அவன் அழிந்தே போவான். *(ஸஹீஹ் இப்னு குஸைமா 1425, இர்வாஉ 638)*

12

பெருநாளில் விரும்பத்தக்க ஒழுங்குகள்

❀

1. பெருநாள் தொழுகைக்காகக் குளித்துக்கொள்வது

أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ كَانَ يَغْتَسِلُ يَوْمَ الْفِطْرِ قَبْلَ أَنْ يَغْدُوَ إِلَى الْمُصَلَّى

அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ நோன்புப் பெருநாள் அன்று தொழுகைத் திடலுக்குப் போவதற்கு முன்பு குளித்துக்கொள் பவர்களாக இருந்தார்கள். (அறிவிப்பு: நாஃபிஉ ﷺ, முஅத்தா 609)

சயீது இப்னு ஜுபைர் ﷺ கூறுகிறார்கள்: மூன்று விசயங்கள் பெருநாளில் நபிவழியாகும். அவை:

1. நடந்துசெல்வது (திடலுக்கு ஒரு பாதையில் போய் மறு பாதையில் வருவது),
2. (தொழுகைக்குப் புறப்படும் முன்) குளித்துக்கொள்வது,
3. தொழுகைக்காக வெளியேறிச் செல்வதற்கு முன் சாப்பிட்டுக் கொள்வது. (இர்வாஉல் கலீல் 3/104)

2. சிறந்த ஆடையை உடுத்திக்கொள்வது

ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما قَالَ كَانَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يَلْبَسُ يَوْمَ الْعِيدِ بُرْدَةً حَمْرَاءَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் பெருநாள் தினத்தில் பச்சை நிற ஆடை அணிபவர்களாக இருந்தார்கள் என்கிறார்கள் இப்னு அப்பாஸ் ﷺ. (ஸஹீஹா 1279)

நபி ﷺ அவர்கள் தம்மிடம் உள்ள ஆடைகளில் மிகவும் அழகானதை அணிவார்கள். அவர்களிடம் சிறப்பு ஆடைகள் இருந்தன. அவற்றை இரண்டு பெருநாள்களுக்கும் ஜும்ஆவுக்கும் அணிவது அவர்களின் வழக்கம். (ஸாதுல் மஆது 1/441)